

கலைஞர் 100
1924 - 2024

இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 327 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – ஆனி 24 – புதன்கிழமை 08 ஜூலை 2026 – திருச்சி ★★ 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 327 : Thiruvalluvar Year - 2057 - Aani 24 - Wednesday 08 July 2026 - Trichy ★★ 8 Pages ₹ 5.00


### 38 துறைகளில் 5 துறைகளின் அரசாணைகள் மட்டுமே இணைய தளத்தில் பதிவேற்றம்!

# த.வெ.க. அரசின் வெளிப்படைத்தன்மை எங்கே முதல்வரே?

## தி.மு.க.வின் ஐ.டி.பிரிவு கேள்வி!

**சென்னை, ஜூலை 8- தமிழ்நாடு அரசின் 38 துறைகளில் 5 துறைகளின் அரசாணைகள் மட்டுமே இணைய தளத்தில் வெளியாகி உள்ளதாக ‘தி இந்து’ நாளேட்டில் வெளியான செய்தியை மேற்கோள் காட்டி, தி.மு.க.வின் ஐ.டி. பிரிவு, உங்களின் வெளிப்படைத்தன்மை எங்கே முதல்வரே என்று கேள்வி எழுப்பி உள்ளது.**

தி.மு.க.வின் ஐ.டி.விங் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:–

**உங்களின் வெளிப்படைத்தன்மை (Transparency) எங்கே, முதல்வர் அவர்களே?**

மே 10 அன்று பதவியேற்றதிலிருந்து, TVK அரசு மக்களை இருளிலேயே வைத்திருக்கிறது.

38 துறைகளில் வெறும் 5 துறைகள் மட்டுமே தங்களின் அரசாணைகளை (G.O.) அதிகாரப்பூர்வ இணைய தளத்தில் பதிவேற்றியுள்ளன.

அரசின் அதிகாரப்பூர்வ உத்தரவுகளே பொதுமக்களின் பார்வைக்கு வராமல் இருந்தால், தமிழ்நாடு மக்கள் அரசை எவ்வாறு பொறுப்புக்கூற வைப்பார்கள்?

ஊடகங்களுக்காக பிரம்மாண்ட மான அறிவிப்புகள் வெளியிடப்படுகின்றன. ஆனால், அவற்றுக்கான உண்மையான நிர்வாக ஆவணங்கள் காணப்படவில்லை அல்லது புதுப்பிக்கப்படாமல் உள்ளன.

தனது செயல்பாடுகளை மறைக்கும் அரசு என்பது, பொது ஆய்வுக்கும் விமர்சனத்திற்கும் அஞ்சும் அரசாகும்.

**மூடிய கதவுகளுக்குப் பின்னால் செயல்படும் நிர்வாகம்!**

மூடிய கதவுகளுக்குப் பின்னால் செயல்படும் நிர்வாகம் அல்ல; வெளிப்படையாக இயங்கும் நிர்வாகம் தான் எங்களுக்குத் தேவை.

இவ்வாறு தி.மு.க.வின் ஐ.டி. பிரிவு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக ‘தி இந்து’ நாளேட்டில் வெளியான செய்தி வருமாறு:–

தமிழ்நாட்டில் மே 10ஆம் தேதி த.வெ.க. அரசு பொறுப்பேற்ற பிறகு, 38 துறைகளில் ஐந்து துறைகள் மட்டுமே தங்கள் அரசாணைகளைத் (G.O.s) தமிழ்நாடு அரசு இணைய தளத்தில் வெளியிட்டுள்ளன.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறை, கூட்டுறவுத் துறை, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, நிதித் துறை மற்றும் பொதுத் துறை ஆகியவற்றை ‘விதிவிலக்கானவை’ என்று குறிப்பிடலாம்; ஏனெனில், மே மற்றும் ஜூன் மாதங்களில் வெளியிடப்பட்ட தங்கள் அரசாணைகளை (G.O.s) இத்துறைகள் இணையதளத்தில் பதிவேற்றியுள்ளன.

‘சிங்கப்பெண்’ (Singappen) சிறப்புப் படையை உருவாக்குதல் மற்றும் இரு மாதங்களுக்கு 500 யூனிட் மின்சாரத்தைப் பயன்படுத்தும் வீட்டு உபயோகிப்பாளர்களுக்குக் கூடுதலாக 100 யூனிட் மின்சாரம் வழங்குதல் போன்ற நடவடிக்கைகள் இதில் அடங்கும். அதே சமயம், இந்த நடவடிக்கைகள் குறித்த அரசாணைகள் பொதுவெளியில் கிடைக்கின்றன.

கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்து விவசாயிகள் பெற்ற பயிர்க் கடன்களைத் தள்ளுபடி செய்வது தொடர்பான நிவாரண நீட்டிப்பு குறித்த அரசாணை, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் ‘What’s New’ (புதியவை) பகுதி மற்றும் அரசாணைகள் பகுதியின் தமிழ் வடிவம் ஆகியவற்றில் கிடைக்கிறது.

ஆனால், அத்துறையின் ‘அரசு ஆணைகள்’ (Government Orders) பகுதியின் ஆங்கிலப் பதிப்பில் அது இடம்பெறவில்லை; அப்பகுதியில் கடைசியாக வெளியிடப்பட்ட அரசு ஆணை ஜனவரி 25, 2022 அன்று பிறப்பிக்கப்பட்டதாகும்.

இந்த ஆய்விற்காக, அரசாணை (G.O.) பகுதியின் ஆங்கிலப் பதிப்பில் கிடைக்கக்கூடிய ஆவணங்கள் மட்டுமே கருத்தில் கொள்ளப்பட்டுள்ளன. சிறப்புப் படை தொடர்பான அரசாணையை வெளியிட்ட ‘உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை’ யானது, இந்த ஆண்டு ஏப்ரல், மே மாதங்களில் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலுக்கான மாதிரி நடத்தை விதிகள் அமலுக்கு வரும் வரை, இணையதளத்தில் தங்கள் உத்தரவுகளை வெளியிட்டிருந்த 10 துறைகளில் ஒன்றாகும்.

பிப்ரவரி 27 அன்று வெளியிடப்பட்ட உத்தரவை இணையதளத்தில் பதிவேற்றிய பிறகு, அதன் பிரிவில் வேறு எந்த அரசாணை (G.O.) விவரங்களும் இடம் பெறவில்லை. ஆனால், எரிசக்தித் துறை ஒரு தனிப் பிரிவாகக் கருதப்படுகிறது; ஏனெனில், கடந்த ஒன்றரை ஆண்டுகளாக அத்துறையும் மேலும் எட்டுத் துறைகளும் தங்கள் பிரிவு சார்ந்த விவரங்களைப் புதுப்பிக்கவில்லை. அவற்றின் அரசாணைகள் அனைத்தும் 2024ஆம் ஆண்டுக்குரியவையாகவே இருந்தன.

இவ்வாறு ‘தி இந்து’வில் செய்தி வெளியிட்டுள்ளது.

### கோவை மின்வாரியத்தில் பதவி உயர்வு பெற்ற

# அதிகாரிகள் பணியிட மாறுதலில் அமைச்சர் தலையீடு!

## பாதிக்கப்பட்ட பணியாளர்கள் குற்றச்சாட்டு!

கோவை, ஜூலை 8 - கோவை மின்வாரியத்தில் பதவி உயர்வு பெற்ற அதிகாரிகள் பணியிட மாறுதல் விவகாரத்தில் மாவட்டப் பொறுப்பு அமைச்சர் சம்பத்குமாரின் தலையீடு இருப்பதாகவும், அவரது சிபாரிசின் பேரில் சில ஊழியர்கள் பணியிட மாறுதல் செய்யாமல் அதே அலுவலகத்தில் பணியாற்றி வருவதாகவும் பாதிக்கப்பட்ட மின் பணியாளர்கள் குற்றம்சாட்டி உள்ளனர்.

கோவை மின் மண்டலம் உள்பட அனைத்து மண்டலத்திற்கு உட்பட்ட அலுவலகத்தில் பதவி உயர்வு பெற்றவர்கள் பணியிட மாறுதல் மற்றும் விருப்ப இடமாறுதல் பெற்றவர்களுக்கு ஒதுக்கப்பட்ட பணியிடத்தில் பணியில் சேர வேண்டும் என உத்தரவிடப்பட்டது. தற்காலிக பணியிட மாறுதல் பெற்றவர்களும் உடனடியாக பணி விடுவிப்பு செய்து அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட அலுவலகத்தில் உடனடியாக பணியில் சேர வேண்டும் என சென்னை மின் வாரிய தலைமைப்பொறியாளர் அனைத்து மண்டல தலைமைப் பொறியாளர், மேற்பார்வை பொறியாளருக்கு உத்தரவிட்டிருந்தார்.

**விதிகளை மீறி செயல்படுகின்றனர்!**

ஆனால், கோவை மண்டலத்தில் குறிப்பிட்ட சில பணியாளர்களை மட்டும் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் சேர நிர்பந்தம் செய்யப்பட்டு இருப்பதாக புகார் எழுந்துள்ளது. தவிர, பதவி உயர்வு பெற்ற மற்றும் பணியிட மாறுதல் பெற்ற அலுவலர்களை மட்டும் விடுவிப்பு செய்யாமல் அதே அலுவலகத்தில் தற்காலிகப் பனியிட மாறுதல் என்ற பெயரில் பணி மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டு இருப்பதாகக் கூறப்படு கிறது. இந்நிலையில், தற்காலிகப் பணியிட மாறுதல் என்பது ஆறு மாதம் வரை மட்டும் பணி செய்ய வேண்டும். அதற்கு தலைமை பொறியாளர் அனுமதி அளிக்க வேண்டும் என்ற விதிகளை மீறி கோவை மாநகர் வட்டம் உள்ளிட்ட பல வட்டங்களில் தலைமை பொறியாளர் உத்தரவினை மீறி செயல்பட்டு வருகின்றனர் என மின் வாரிய பணியாளர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

மேலும், பணி விடுப்பு செய்தவர்களின் பட்டியலையும் சென்னை தலைமை அலுவலகத்திற்கு அனுப்பாமல் அலட்சியப்படுத்தி வருவதாக அவர்கள் தெரிவிக்கின்றனர். சில பணியாளர்களை மட்டும் விடுவிப்பு செய்த நிலையில், தனக்கு வேண்டியவர்களை மட்டும் மின் வாரியத்தின் உத்தரவினை மீறி அதே அலுவலகத்தில் பணிபுரிய கோவை மாவட்ட பொறுப்பு அமைச்சர் சரத்குமார் தலையீடு இருப்பதாக பாதிக்கப்பட்ட பணியாளர்கள் குற்றம்சாட்டுகின்றனர். மாவட்ட பொறுப்பு அமைச்சரிடம் பணியாளர்கள் சிலர் தங்களை இதே அலுவலகத்தில் பணிபுரிய அனுமதிக்க வேண்டும் என கேட்டதாகவும், அதனால் அவர்களுக்கு அவர் சிபாரிசு செய்து இருப்பதாகவும் பாதிக்கப்பட்டவர்கள் கூறுகின்றனர்.

**அமைச்சரின் தலையீட்டை விசாரிக்க வேண்டும்!**

இந்நிலையில், மின் வாரிய உத்தரவினை கடைப் பிடிக்காமல், அலட்சியம் காட்டும் மின்வாரிய அதிகாரிகள் மீது மின்துறை அமைச்சர் ஒழுங்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். மின் வாரிய உத்தரவின்படி அனைவரையும் விடுவிப்பு செய்து அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட அலுவலகத்தில் பணியில் சேர நடவடிக்கை எடுக்க வேண்டும். அல்லது பதவி உயர்வு பெற்றவர்களின் பதவி உயர்வை ரத்து செய்ய வேண்டும் என மின் பணியாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். தவிர, அமைச்சரின் தலையீடு தொடர்பாக விசாரிக்க வேண்டும் எனவும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

### அமைச்சரின் அறிவற்ற செயல் அருவருக்கத்தக்கது!

# ‘ரீல்ஸ்’ மோகத்திற்கு பள்ளிக் குழந்தைகளைப் பயன்படுத்துவதா?

## சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் கடும் கண்டனம்!





சென்னை, ஜூலை 8-

அமைச்சரின் அறிவற்ற செயல் அருவருக்கத்தக்கது! என்றும், ‘ரீல்ஸ்’ மோகத்திற்கு பள்ளிக் குழந்தைகளைப் பயன்படுத்துவதா? எனவும், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ட்விட்டர் பதிவு வருமாறு :

**அரசுப்பள்ளியில் ஆங்கிலப் புலமையை ஆய்வு செய்கிறேன் என்ற பெயரில் ‘ரீல்ஸ் அமைச்சர்’ ஒருவர் (தொழில்துறை அமைச்சர் கீர்த்தனா) பிஞ்சுக் குழந்தையிடம் நடந்துகொண்ட விதம் அதிர்ச்சியும் அருவருப்பும் அளிக்கிறது.**

It is grossly insensitive.

**மாணவர்களிடம் எப்படி நடந்துகொள்ள வேண்டும், எந்தச் சூழ்நிலைகளில் கேமராக்களைத் தவிர்க்க வேண்டும் என அமைச்சருக்குத்தான் முதலில் Class எடுக்க வேண்டும்.**

**நம் குழந்தைகளுக்குத் தன்னம்பிக்கை ஊட்டுவது தான் நமது வேலை. மாறாக, அவர்களின் தன்னம்பிக்கையை உடைப்பதை யாராலும் ஏற்றுக்கொள்ள முடியாது.**

**உங்கள் விளம்பர வெறியை இத்துடன் நிறுத்திக் கொள்ளுங்கள். ரீல்ஸ் மோகத்துக்குப் பள்ளிக் குழந்தைகளைப் பயன்படுத்தாதீர்கள்.**

இவ்வாறு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

### நாடு முழுவதும்

# 58 பொறியியல் கல்லூரிகள் மூடல்!

## 950–க்கும் மேற்பட்ட பாடப்பிரிவுகளும் ரத்து!

புதுடெல்லி, ஜூலை 8 - நடப்பு 2025-26 ஆம் கல்வி ஆண்டில் நாடு முழுவதும் 58 பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரிகள் மூடப்பட்டுள்ளதாக அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் குழுமம் (ஏ.ஐ.சி.டி.இ.) தெரிவித்துள்ளது. மாணவர் சேர்க்கைக் குறைவு, உள்கட்டமைப்பு வசதியின்மை உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நாடு முழுவதும் மொத்தம் 58 பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரிகளை முறையாக மூடுவதற்கு நடப்பு கல்வி ஆண்டில் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. முறையான மூடல் என்பது, அனுமதி வழங்கப்பட்ட அந்த குறிப்பிட்ட கல்வி ஆண்டில் முதலாமாண்டு மாணவர் சேர்க்கையை அந்தக் கல்வி நிறுவனங்கள் நடத்தக் கூடாது என்பதாகும். அதே நேரத்தில், அங்கு ஏற்கனவே படித்து வரும் பிற ஆண்டு மாணவர்கள் தங்களது படிப்பைத் தொடரவும், பட்டங்களைப் பெறவும் எவ்வித தடையும் இருக்காது.

மூடப்பட்ட 58 கல்வி நிறுவனங்களில், அதிகபட்சமாக உத்தர பிரதேசம் மற்றும் மகாராஷ்டிரா மாநிலங்களில் தலா 12 கல்லூரிகள் மூடப்பட்டுள் ளன.

இதற்கு அடுத்தபடியாக மத்திய பிரதேசத்தில் 8 கல்லூரிகளும், தெலங்கானா மற்றும் பஞ்சாபில் தலா 4 கல்லூரிகளும் மூடப்பட்டு உள்ளன.

ஆந்திர பிரதேசம் மற்றும் ராஜஸ்தானில் தலா 3 கல்லூரிகளும்; குஜராத், கர்நாடகா, தமிழ்நாடு ஆகிய மாநிலங்களில் தலா 2 கல்லூரிகளும் மூடப்பட்டுள்ளன. ஹரியானா, ஒடிசா, உத்தராகண்ட் மற்றும் மேற்கு வங்கம் ஆகிய மாநிலங்களில் தலா ஒரு கல்லூரி மூடப்பட்டு ள்ளது.

இந்த 58 நிறுவனங்களில், 3 கல்லூரிகள் அரசு உதவி பெறும் கல்வி நிறுவனங்கள் ஆகும். மீதமுள்ளவை அனைத்தும் தனியார் சுயநிதி கல்லூரிகள் ஆகும். மேலும், இதே காலகட்டத்தில் நாடு முழுவதும் உள்ள தொழில்நுட்பக் கல்லூரிகளில் வழங்கப்பட்டு வந்த 950க்கும் மேற்பட்ட பாடப்பிரிவுகளும் ரத்து செய்யப்பட்டுள்ளது.

# கனமழை: மும்பையில் விமான சேவை பாதிப்பு!



புதுடெல்லி, ஜூலை 8- நாடு முழுவதும் தென் மேற்கு பருவமழை தீவிர மடைந்துள்ளது. மும்பையில் கனமழையால் விமான போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது. தென்மேற்கு பருவமழை நாடு முழுவதும் தீவிர மடைந்துள்ளது. அத்துடன் வங்க கடலில் ஒடிசாவை ஒட்டிய மேற்கு வங்கக் கடலோரத்தில் வலு பெற்றுள்ள காற்றழுத்த தாழ்வு பகுதி காரணமாக நாட்டின் மத்திய மற்றும் மேற்கு மாநிலங்களில் கனமழை கொட்டி வருகிறது.

மகாராஷ்டிரா, குஜராத் உள்ளிட்ட மாநிலங்களில் கொட்டி தீர்த்து வரும் கனமழையால் பல இடங்களில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. மும்பையில் கனமழை பெய்யும் என வானிலை மையம் ரெட் அலர்ட் எச்சரிக்கை விடுத்திருந்தது.

இந்த நிலையில் மும்பையில் இரவு முழுவதும் பெய்த கனமழையால் அந்நகரம் கடுமையாகப் பாதிக்கப்பட்டது. பல பகுதிகளில் 30 செ.மீக்கும் அதிகமாக மழை கொட்டியதால் மும்பையின் பல பகுதிகள் வெள்ளக்காடாக காட்சியளிக்கிறது. இதன் காரணமாக, சத்ரபதி சிவாஜி மகாராஜ் சர்வதேச விமான நிலையத்தின் ஓடுபாதை செயல்பாடுகள் நேற்று முன்தினம் ஒரு மணி நேரம் நிறுத்தப்பட்டது. இதனால் மும்பைக்கு வரும் விமானங்களின் நேரம், மும்பையில் இருந்து செல்லும் விமானங்களின் புறப்பாடு ஆகியவற்றில் காலதாமதம் ஏற்பட்டது.

வங்காள விரிகுடாவில் நிலை கொண்டிருந்த குறைந்த காற்றழுத்தப் பகுதி வலுப்பெற்று காற்றழுத்தத் தாழ்வு மண்டலமாக மாறியதையடுத்து, ஒடிசா மாநிலத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களும் உயர் எச்சரிக்கை நிலையில் வைக்கப்பட்டுள்ளது.